| S. No. | Title & Author | Page No. |
|---|---|---|
| 9. | **Upper Rough Topology**<br>*S. Subhasri & S. Athisaya Ponmani* | 62 |
| 10. | **இறையன்பு வலியுறுத்தும் இறைஒன்றல்**<br>**ஜெ. அருள் இருதய ஜெயந்தி** | 79 |
| 11. | ஐசக் அருமைராசனின் கீறல்கள் நாவல்கள் வெளிப்படுத்தும் கதைப்பொருள் மற்றும் உள்ளடக்கம்<br>**இ. அல்போன்சாள்** | 83 |

JAC JOSHAM

# JAC JOURNAL OF SCIENCE, HUMANITIES AND MANAGEMENT

(A National Journal)

Vol. 4, No.2 June 2017 ISSN 2347-9868

SERVE WITH LOVE
JAYARAJ ANNAPACKIAM COLLEGE FOR WOMEN
JAC
PERIYAKULAM

Published by

JAYARAJ ANNAPACKIAM COLLEGE FOR WOMEN (Autonomous)
Accredited at 'A' Grade in 3rd Cycle by NAAC
Affiliated to Mother Teresa Women's University, Kodaikanal
PERIYAKULAM - 625 601, TAMIL NADU
www.annejac.com

Scanned by CamScanner

# இறையன்பு வலியுறுத்தும் இறைஒன்றல்

ஜெ. அருள் இருதய ஜெயந்தி
தமிழ்த்துறை
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம்.

மனிதன் அடிப்படை வசதிகளோடும், ஆடம்பர வசதிகளோடும் வாழ்ந்தாலும் அவை அனைத்தும் அவனுக்கு நிறைவளிப்பதில்லை. **"இறைமை"** என்ற ஒன்று மட்டுமே மனித வாழ்வில் நிம்மதியை நல்குவது. முடியுடைவேந்தரும் வளமோடு வாழ்ந்து இன்பம் துய்த்து இறுதியில் துறவு பூண்டு இறைமையில் இளைப்பாறினர். சமகாலப் படைப்பாளரான இறையன்பு I.A.S அவர்கள் தமது கட்டுரைகளில் இறைமையுடன் ஒன்றுமாறு கூறுகிறார். இது குறித்த கருத்தாங்கங்களை இக்கட்டுரை மொழிகின்றது.

**ஒன்றுதல்**

நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கையில் நிறைந்து கிடக்கும் இறைமையை உணரும் அனுபவம் ஒன்றுதலின் பாற்படும். இறைமை எங்கும் நிறைந்து காணப்படுவதை

"வெஞ்சுடர் ஒளியும் நீ! திங்களுள் அளியும் நீ
அனைத்தும் நீ! அனைத்தினும் பொருளும் நீ"-1

என்கின்றது பரிபாடல் சீறாப்புராணம்,

"இறைவனே, மறையின் வாழ்வேயெங்கணும் பரந்துநின்ற
குறைவிலாப் பொருளே"-2

என்கின்றது.

"அவருடைய படைப்பை எங்கு நோக்கினாலும் அவர் கைவன்மையைக் காணலாம். மண்ணில், முளைவிடும் செடியில், நீரில் காணலாம். மனிதனுக்கு உணவளிக்கக்கூடிய நிகழ்வுகளில் காணலாம்"-3 என்கின்றார் ஜேம்ஸ் மார்டின். இறையன்பு தனது கட்டுரையில் "காகத்தின் இறகுகளிடம் இறைமையின் முத்திரையிருக்கிறது. குயிலில் குரலில் இருக்கிறது. ஆந்தையின் அலறலிலும் இருக்கிறது. மயிலின் தோகையிலும் இருக்கிறது. மரங்களைப் பார்க்கும் போதும் அதில் காணும் பச்சையம் இறைமையைக் குறிக்கிறது. எங்கெல்லாம் உயிர் இருக்கிறதோ, துடிப்பு இருக்கிறதோ, துளிர்ப்பது

நிகழ்கிறதோ அங்கெல்லாம் நிச்சயம் இறைமை இருக்கிறது"[4] என்று இறைமை எங்கும் வீற்றிருக்கும் நிலையை உணர்த்தி, உயிரை அதனோடு உறவுகொள்ளத் தூண்டுகின்றார். அதற்கு உதவும் வழிமுறைகளைத் தமது கட்டுரைகள் வாயிலாக எடுத்துக்காட்டுகின்றார். அவை

- மௌனம்
- விழிப்புணர்வு

எனும் இருவகையின.

**மௌனம்**

கண்ணதாசன் மௌனத்தின் சிறப்பினை, "கொஞ்சம் மௌனத்தைக் கடைபிடியுங்கள். அதில் ஒருவகை நிம்மதி உண்டு. மௌனம் 'கலக நாஸ்தி' என்பார்கள். அளந்து பேசி, அளந்து வாழ்கிறவனுக்கு அதிகபட்ச ஆசை கிடையாது. ஆசை குறையக் குறையத் துன்பமும் குறைந்து போகிறது"[5] என்று உணர்த்துகின்றார்.

மௌனம், மனதை அமைதிப்படுத்தி இறைவனுடன் அணுக உகந்தது. மொழியைக் குறித்துச் சண்டைகள் நடக்கின்ற வேளையில், "இறைமை மொழிகளைக் கடந்தது"[6] எனும் கருத்தை இறையன்பு முன் வைக்கின்றார். இறைவனை உணர அவருடன் உறவாட மௌனத்தைக் காட்டிலும் சிறந்தமொழி இல்லை. "பூரண அமைதியில் எண்ணங்கள் எல்லாம் அடங்கும்போது மொழி மறைந்து விடுகிறது. சொற்கள் கரைந்து விடுகின்றன. மனம் மாயமாகிவிடுகிறது. 'நான்' என்கிற உள்ளுணர்வு கூட ஓடிவிடுகிறது."[7] என்று மௌனத்தினால் விளையும் பயன்களைக் கூறும் அவர், அம் மௌனத்தை ஏற்பது பலருக்குச் சாத்தியமற்று இருப்பதையும் சுட்டுகின்றார். "தன்னை இழக்கச் சம்மதம் தருபவர்களுக்கே மௌனம் சாத்தியமாகிறது. மனம் சாத்தியமாகிறது."[8] எனும் அவர், மனிதர்கள் ஓயாது பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். அப்படி ஓயாமல் பேசுவதற்குக் காரணமாக, "நாம் இதயத்துடன் இயையமறுக்கும் போதெல்லாம் சொற்களுக்குச் சொந்தம் கொண்டாடுகிறோம்"[9] எனும் காரணத்தைச் சுட்டுகின்றார். மௌனத்தைக் கைக்கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றார். தேவையில்லாத பேச்சுக்கள் பேசாமல் இறைவனோடு, மனதோடு மனதாகப் பேசுமாறு வலியுறுத்துகின்றார். மௌனம், இறைவனும் மனிதனும் உரையாடும் மௌன மொழிஎன்கின்றார்.



Scanned by CamScanner

**விழிப்புணர்வு**

விழிப்புணர்வு என்பது உள்ளம் விழித்திருப்பதைக் குறிக்கின்றது. உள்ளம் விழித்திருக்கும் பொழுது இறை ஆற்றல் மனிதனுள் வருவது எளிதாகின்றது. மனிதன் உயிர்த் துடிப்போடு இருக்கின்றான் என்பதற்கு அடையாளம் அவனது விழிப்புணர்வே.

"விழிப்புணர்வு என்பது ஒவ்வொரு நொடியிலும் தனது புலன்களைத் தயாராய் வைத்திருப்பது"[-10]

என்று விளக்கும் இறையன்பு,மனிதன் கருவிபோல் செயல்படும் பொழுது அவனிடம் உள்ள மனிதத்தன்மை குறைந்து தெய்வீகத் தன்மை காணாமல் போய் விடுவதாகக் கூறுகின்றார்.

"உண்மையான விழிப்புணர்வு விழிகளோடு மட்டும் தொடர்புடையது அல்ல. அத்தனை பொறிகளும் ஒரே இலக்கில் முழு மூச்சுடன் பயணிக்கும் போது சின்னச் சிலிர்ப்பு கூட உணரப்படும்"[-11] என்று விழிப்புணர்வு செயல்படும் விதத்தைக் கூறும் அவர், குறிப்பாக உணவு உண்ணும் போது விழிப்புணர்வுடன் இருக்கச் சொல்கின்றார். "உண்பது வாலாயமாகவும் (வழக்கமாகவும்) இருக்கலாம். அதுவே வழிபாடாகவும் மாறலாம். ஒவ்வொரு பருக்கையிலும் கவனத்தைக் குவித்தால் ஒட்டுமொத்த விழிப்புணர்வும் மேம்படும்"[-12]என்று கூறும் அவர்

> "பருகும் போதும், கடிக்கும் போதும், தின்னும் போதும், மெல்லும்
> போதும் உறிஞ்சும் போதும், அரைக்கும் போதும், விழுங்கும் போதும்
> உணவின் மீதே கவனமாக இருந்தால் நீர் கூடப் புனிதத் தீர்த்தம்
> ஆகும். தயிர் சாதம் கூட அமிர்தமாக மாற வாய்ப்புண்டு"[-13]

என்று சாப்பிடுதலில் அனைத்து நிலைகளிலும் விழிப்புணர்வினைக் கடைபிடிக்கச் சொல்கின்றார். விழிப்புணர்வால் உண்டாகும் பலன்களை, "விழிப்புணர்வுடன் செயல்களைச் செய்பவர்கள் சுயமாகவே உற்சாகமாக இருக்கமுடியும். அவர்களுக்கு ஊன்றுகோல்கள் தேவையில்லை"[-14] என்கிறார் இறையன்பு. அவசரம், வேகம் எல்லாம் மனிதனது விழிப்புணர்வை விழுங்கிவிடும் காரணிகளாகச் செயல்படுவதைக் காட்டுகின்றார். வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்திலும் மனிதன் கொள்ளும் விழிப்புணர்வு அவனை அனைத்தையும் நிதானமாகச் செயல்பட வைக்கின்றது. அது பிறரை ஏற்கத் துணைபுரிகின்றது. பிறரை ஏற்கும் மனிதன், இறைமைக்குள் நுழைய வழி வகுக்கின்றது என்பதைத் தெளிவுறுத்துகின்றார்.



Scanned by CamScanner

## தீர்வுகள்

- மனிதவாழ்வில் இறைமை மட்டுமே நிலையானது; பேரின்பமானது; உயிரை நற்கதிக்கு இட்டுச் செல்வது.
- மௌனம், விழிப்புணர்வு எனும் இரண்டும் இறைமையுடன் உறவுகொள்ளும் வழிகளாகின்றன.
- இறைவனுடன் உறவாட, அவரை உணர மௌனம் சிறந்த மொழி ஆகின்றது.
- இறைஆற்றல் மனிதனுக்குள் வருவதற்கு விழிப்புணர்வு களனாகின்றது.

## குறிப்புகள்

1. பரிபாடல், பா.எ. 3.
2. சீறாப்புராணம், பா.எ. 4750.
3. James martin, how can I find god? P.21 (When We Look at God's creation, We see wonderful work of the Almight Hand, I find God in the soil I till, the crops im grow, and the water I use – all working together to provide food for many around the world and my self with a living).
4. வெ. இறையன்பு, ஏழாவது அறிவு, ப.58.
5. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம், ப.70.
6. வெ.இறையன்பு, வாழ்க்கையே ஒரு வழிபாடு, ப.47.
7. மேலது, ப.48.
8. மேலது, ப.49.
9. மேலது, ப.48.
10. வெ. இறையன்பு, உள்ளொளிப் பயணம், ப.31.
11. வெ. இறையன்பு, திருப்பாவைத் திறன், ப.95.
12. வெ. இறையன்பு, வாழ்க்கையே ஒரு வழிபாடு, ப.19.
13. மேலது, ப.24.
14. வெ. இறையன்பு, ஏழாவது அறிவு, 111, ப.42.



Scanned by CamScanner